# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

30

S.W.R.D. பண்டாரநாயக்காவின் மரணத்துக்குப் பின்பு - அடுத்த பிரதமராக யார் வருவது என்கின்ற பிரச்சினை தோன்றியது. பண்டாரநாயக்கா உயிருடன் இருந்த காலத்தில் - டி.எஸ். சேனநாயக்கா தனக்குப்பின் தன் மகன் டட்லி சேனநாயக்காவை பிரதமர் பதவிக்கான வாரிசாக உருவாக்கியது போல், தன்னுடைய வாரிசுகள் என்று அவர் யாரையும் உருவாக்கவில்லை. அவருடைய பிள்ளைகளான சுனித்திராவும், சந்திரிகாவும், அனுராவும் சிறு வயதினராக இருந்தார்கள். அவரது மனைவியான சிறீமாவோ பண்டாரநாயக்கா அரசியலில் ஈடுபடுமளவுக்கு அனுபவமற்றவராக இருந்தார்.

முறைப்படி கல்வியிலும், அனுபவத்திலும், கட்சியின் மூத்த உறுப்பினர் என்ற வகையிலும் சி.பி.டி. சில்வாவே பிரதமராக தெரிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் குறைந்த சாதியில் பிறந்தவராக இருந்தபடியால், கண்டிய உயர் சாதி நிலப்பிரபுக்கள் நிறைந்த சுதந்திரக் கட்சிக்குள் அவரைப் பிரதமராகத் தெரிவு செய்வதற்கு நிறைய எதிர்ப்புகள் கிளம்பின. S.W.R.D. பண்டாரநாயக்கா கொல்லப்பட்டபோது, சி.பி.டி சில்வா மருத்துவ சிகிச்சைக்காக இலண்டனுக்குச் சென்றிருந்தார். இதைச் சாக்காக வைத்துக்கொண்டு கண்டிய கொயிகம சாதியினர் அவருக்குப் பதிலாக, காலியைச் சேர்ந்த W. தகாநாயக்காவை பிரதமராகத் தெரிவு செய்தனர். தன்னளவில் மிகவும் நேர்மையானவராக இருந்த W. தகாநாயக்கா பிரதமராக பதவி ஏற்றவுடனேயே S.W.R.D. பண்டாரநாயக்காவின் மந்திரி சபையில் இருந்த மந்திரிகளில் அரைவாசிப் பேரை வெளியே அனுப்பிவிட்டு அந்த இடத்திற்கு புதியவர்களை நியமித்தார்.

ஆயினும் போட்டியும், பொறாமையும் குழி பறிப்புக்களும் நிறைந்த பாராளுமன்ற அரசியலில் அவற்றைச் சமாளித்துக் கொண்டு தன்னால் தொடர்ந்து பிரதமராக இருக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட W. தகாநாயக்கா - பாராளுமன்றத்தில் தன்னுடைய பிரதமர் பதவியை உறுதிப்படுத்துவதற்கான நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தாமலே பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய தேர்தலை நடத்தும்படி மகாதேசாதிபதிக்கு சிபார்சு செய்தார்.

இதன்படி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 1960-ம் ஆண்டு மார்ச் மாதம் தேர்தல் நடாத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் W. தகாநாயக்கா சுதந்திரக்கட்சியில் இருந்து விலகி, புதிய ஒரு கட்சியை ஆரம்பித்து அதனுடைய சின்னத்தின் கீழ் போட்டியிட்டார். அதுபோல் S.W.R.D. பண்டாரநாயக்கா உயிருடன் இருந்தபோது ஐக்கிய முன்னணி, மற்றும் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்பட்ட இடதுசாரிக்கட்சிகள், இந்த 1960 மார்ச் தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிட்டன. லங்கா சமசமாஜக் கட்சி, முதலாளித்துவ எதிர்ப்பு வேலைத்திட்டம் ஒன்றை முன்வைத்து 100 தொகுதிகளில் போட்டியிட்டது. தாம் தேர்தலில் வெற்றி பெற்றால் அடுத்த பிரதமர் என். எம். பெரேரா என்றும், அவரது அமைச்சரவையில் யார் யார் இடம் பெறுகிறார்கள் என்பதையும் பட்டியலிட்டுக் காட்டியது. கம்யூனிஸ்ட் கட்சியும், ஏனைய சிறு இடதுசாரிக்கட்சிகளும் ஐக்கியதேசியக்கட்சி எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு வேலைத் திட்டத்தின் கீழ் போட்டியிட்டன. சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும் தனித்தனியாகப் போட்டியிட்டன. வடக்கு, கிழக்கில் தமிழரசுக் கட்சியும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் ஒன்றுக்கொன்று எதிராகப் போட்டியிட்டன.

1958-ல் தமிழ்மொழிக்கு சம அந்தஸ்த்துக் கோரி சத்தியாக்கிரகப் போராட்டம், 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டம் எல்லாம் நடத்தி தமிழ் மக்கள் மத்தியில் தங்களைத் தேசிய வீரர்களாகக் காட்டிவிட்டு, திடீர் என்று மந்திரிப் பதவிக்காக அவற்றை விட்டுகொடுத்துவிட்டால் மக்கள் தங்களை தூக்கி எறிந்துவிடுவார்கள் என்பதை தமிழரசுக் கட்சித் தலைவர்கள் நன்கு தெரிந்து வைத்திருந்தனர்.

# பிரதமர் நாற்காலிக்கான ஓட்டப் பந்தயங்கள்

இந்தத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கு 46 இடங்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 50 இடங்களும், லங்கா சமசமாஜக் கட்சிக்கு 10 இடங்களும், மக்கள் ஐக்கிய முன்னணிக்கு 10 இடங்களும் கிடைத்தன. இதனால் எந்தக் கட்சியும் தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கக் கூடிய நிலை ஏற்படவில்லை.

அதிக இடங்களைப் பெற்ற தனி ஒரு கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் டட்லி சேனநாயக்காவை ஆட்சியமைக்குமாறு அப்போது மகா தேசாதிபதியாக இருந்த சேர். ஒலிவர் குணவர்த்தனா அழைத்திருந்தார்.

வர்க்கக் குணாம்சத்திலும், ஏகாதிபத்திய சார்புத் தன்மையிலும், எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒத்துப்போய் வந்த தமிழரசுக்கட்சி, இந்த 1960 மார்ச் தேர்தலில் வடக்குக் கிழக்கில் அமோகமாக வெற்றியீட்டியபோதிலும், அரசாங்கத்தில் சேர்ந்துகொள்ள வருமாறு டல்லி சேனநாயக்கா விடுத்த அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது.

வர்க்கக் குணாம்சத்திலும், ஏகாதிபத்திய சார்புத் தன்மையிலும், எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒத்துப்போய் வந்த தமிழரசுக்கட்சி, இந்த 1960 மார்ச் தேர்தலில் வடக்குக் கிழக்கில் அமோகமாக வெற்றியீட்டிய போதிலும், அரசாங்கத்தில் சேர்ந்துகொள்ள வருமாறு டல்லி சேனநாயக்கா விடுத்த அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது.



1958-ல் தமிழ்மொழிக்கு சம அந்தஸ்த்துக் கோரி சத்தியாக்கிரகப் போராட்டம், 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டம் எல்லாம் நடத்தி தமிழ் மக்கள் மத்தியில் தங்களைத் தேசிய வீரர்களாகக் காட்டிவிட்டு, திடீர் என்று மந்திரிப் பதவிக்காக அவற்றை விட்டுகொடுத்துவிட்டால் மக்கள் தங்களை தூக்கி எறிந்துவிடுவார்கள் என்பதை தமிழரசுக் கட்சித் தலைவர்கள் நன்கு தெரிந்து வைத்திருந்தனர்.

கீரைக்கடைக்கு எதிர்க்கடை போல் அவர்களுடைய தவறுகளை தோலுரித்துக்காட்டி அவர்களை தோற்கடித்துவிட்டு, அவர்களுடைய இடத்தில் தாங்கள் இருந்துகொண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேரம் பேசுவதற்கு தமிழ்க் காங்கிரஸ் கட்சி தயாராக இருந்தது.

இதனால் தமிழரசுக் கட்சியினர் 'ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருந்த கொக்கின் கதையாக' பொறுமை காத்தனர்.

அவர்களது ஒத்துழைப்புக் கிடைக்காததால் டல்லி சேனநாயக்காவின் அரசாங்கம் சிம்மாசனப் பிரசங்கத்திற்கான வாக்கெடுப்பில் தோல்வியடைந்தது.

எதிர்க்கட்சியான சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பு கொடுக்கப்படாமலே பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 1960-ம் ஆண்டு யூலை மாதம் மறு தேர்தலுக்கு உத்தரவிடப்பட்டது.

இந்தத் தேர்தலில், முன்னைய தேர்தலிலிருந்து பாடம் கற்றுக்கொண்ட சிறீலங்கா சுதந்திரக்கட்சி, S.W.R.D பண்டாரநாயக்காவின் விதவை மனைவியான சிறீமாவோ பண்டாரநாயக்காவை கட்சியின் தலைவியாக்கி தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தியது. ஆனால் அவரை எந்தத் தொகுதியிலும் போட்டியிட வைக்கவில்லை. இடதுசாரிக்கட்சிகள், S.W.R.D. பண்டாரநாயக்கா இருந்தபோது செய்து கொண்டதைப்போல ஐக்கிய தேசியக்கட்சி எதிர்ப்பு, ஐக்கிய முன்னணி ஒன்றின் கீழ் போட்டியிட முன்வந்தன. லங்கா சமசமாஜக் கட்சி தனித்து போட்டியிட்டாலும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியுடன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனது வேட்பாளர்களை நிறுத்தியது.

இந்தத் தேர்தலில் சுதந்திரக் கட்சி 75 ஆசனங்களை வென்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு 30 ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. லங்கா சமசமாஜக் கட்சிக்கு 12 ஆசனங்களும், மக்கள் ஐக்கிய முன்னணிக்கு 5 ஆசனங்களும், கம்யூனிஸ்ட் கட்சிக்கு 3 ஆசனங்களும் கிடைத்தன.

சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 75 ஆசனங்கள் கிடைத்தது, லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்களையும், தமிழரசுக் கட்சித் தலைவர்களையும் அதிர்ச்சி அடைய வைத்தது. லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்கள், சுதந்திரக்கட்சிக்கு 50 அல்லது 55 ஆசனங்கள்தான் கிடைக்கும். அவர்கள் அரசு அமைப்பதற்கு தங்களுடைய ஆதரவு தேவை என்று மலைபோல் நம்பிக்கொண்டிருந்தார்கள். அதுபோல் தமிழரசுக் கட்சியினர் முன்னைய தேர்தல்போல் இந்தத் தேர்தலும் எந்த சிங்கள கட்சிக்கும் பெரும்பான்மை பலம் கிடைக்காது. எப்படியும் ஐக்கிய தேசியக்கட்சியே சிறிய பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் நிலை வரும். அப்போது ஐக்கிய தேசியக்கட்சியுடன் தாங்கள் அரசியல் பேர விளையாட்டை நடத்திக்கொள்ளலாம் என்று பெரிதும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

சுதந்திரக் கட்சியினர் தமது வெற்றியைத் தக்க வைத்துக் கொள்வதற்கு சிறீமாவோ பண்டாரநாயக்காவை பிரதமராக்க முற்பட்டனர். ஆனால் அதில் ஒரு பிரச்சினை இருந்தது. அவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறவில்லை.

**- நக்கீரன்**